# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

"Under Section 173 BNSS"

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8040889

1. District : Chengalpattu PS: VSAC Chengalpattu Year: 2024 FIR No.: 04 Date: 24.10.2024 at 02.45 h
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106
(ii) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7, 7A
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2024 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.40 h Time to : 23.30 h
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24.10.2024 Time : 02.45 h
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 24.10.2024 Time : 02.45 h
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South about 40 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Sub-Registar office. Acharapakkam chengalpattu District.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. Manivannan (b) Father's/ Husband's Name : kumar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : age 40/24 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Zonal Deputy Thasildar (g) Address : Acharapakkam. Maduranthagam Taluk chengalpattu District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. Ragunathan age 41, Asst. Inchase. sub Registar Acharapakkam Chengalpattu dt 2) Tr. K. Pandian age 28 S/o Kali, No. 10 Kasthuribai Street Ekattuthangal Guindy. chennai 32. 3) Tr. E. Palani Age. 32 S/o Elumalai No. 39. Pillaiyarkoil Street. Maduraputhur village cheyyur Tk. chengalpattu dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Rs 3.07.600/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -Nil-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) -Nil-

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC Chengalpattu on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] [signature] 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2024 at 06.00 hrs.

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector No. எண் .........
V&AC Chengalpattu

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி

இன்று 24.10.2024-ம் தேதி காலை 02.45 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி திரு.K.மணிவண்ணன். மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம். மதுராந்தகம் வட்டம். செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

அனுப்புநர், திரு.K.மணிவண்ணன். மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம். மதுராந்தகம் வட்டம். செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர். செங்கல்பட்டு. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு. செங்கல்பட்டு. அய்யா. பொருள்: திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுவாஞ்சேரி சார்-பதிவாளர் அலுவலகம் - 23.10.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள், ந.க.எண்.209/2024/அ1, நாள் 23.10.2024. செங்கல்பட்டு மாவட்டம். அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில். ஆவண பதிவிற்கு வரும் நபர்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூலிப்பதாக தொடர்ந்து கிடைத்த தகவலின் அடிப்படையில். ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு தெரிய வரவே செங்கல்பட்டு மாவட்டம். அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில். மண்டல துணை வட்டாட்சியர். அச்சரப்பாக்கம். மதுராந்தகம் வட்டம். செங்கல்பட்டு மாவட்டம் (பொறுப்பு) துணை ஆய்வுக்குழு அலுவலரான என் தலைமையில். செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் மற்றும் செங்கல்பட்டு விஜிலென்ஸ் போலீசார் சகிதம் இரு துறை திடீர் கூட்டாய்வு 23.10.2024-ம் தேதி மாலை சுமார் 3.40 மணி முதல் இரவு சுமார் 23.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் முழுவதும் சோதனை மேற்கொண்டதில் தனி நபர்கள் 1. திரு.K.பாண்டியன். வ/28 த/பெ. காளி எண்.10 கஸ்தூரிபாய் தெரு ஈகாட்டுதாங்கள், கிண்டி, சென்னை-32 என்பவரிடமிருந்து ரூ.1,63,000/- 2. திரு.E.பழனி, வ/32 த/பெ. ஏழுமலை, எண்.39 பிள்ளையார் கோயில் தெரு, மதுராபுதூர் கிராமம், கயப்பாக்கம் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ.1,27,500/- ஆக மொத்தம் ரூ.2,90,500/-ம் மற்றும் Data Entry Operator திருமதி.சுமதி என்பவரின் இருக்கைக்கு எதிரில் உள்ள இன்வர்ட்டர் ஸ்டான்ட் அடியில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.17,100/- என மொத்தம் ரூ.3,07,600/-

(மூன்று லட்சத்து ஏழாயிரத்து அறுநூறு ரூபாய் மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட இரு தனி நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,90,500/-ஐ குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் தரவில்லை. மேற்படி பணம் அச்சரப்பாக்கம் (பொறுப்பு) சார்பதிவாளருக்கு லஞ்சப் பணமாக கொடுக்க கொண்டு வந்த பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது பற்றிய விளக்கம் செயல்முறை ஆணையில் உள்ளது. மேலும், அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.17,100/- குறித்து அச்சரப்பாக்கம் (பொறுப்பு) சார்பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்களிடம் கேட்டபோது சரியான விளக்கம் அளிக்கவில்லை. மேற்படி பணம் அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் பொறுப்பு அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வந்த பணமாக இருக்கும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், தனி நபர்கள் மற்றும் அலுவலக ஆஜரில் இருந்த அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்க கடிதங்கள் மற்றும் அலுவலக பதிவேடுகளின் சான்றொப்பமிட்ட நகல்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அலுவலக ஆவணங்கள் என அனைத்தையும் இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. இது குறித்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கிறேன். (ஒம்) (திரு.K.மணிவண்ணன்), மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர், செங்கல்பட்டு. இணைப்பு. 1) கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.3,07,600/-, 2) திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள், 209/2024/அ1, நாள் 23.10.2024. 3) பணம் கைப்பற்றபட்ட தனி நபர்களின் விளக்க கடிதம்- 2 தாள்கள் 4) அலுவலகம் ஆஜரில் இருந்த தனி நபர்களின் விளக்க கடிதம்- 10 தாள்கள், 5) அலுவலக ஊழியர்கள் அவர்கள் கைப்பட எழுதி கொடுத்த விளக்க கடிதம்- 4 தாள்கள், 6) சான்றொப்பம் இட்ட வருகைப் பதிவேடு- அக்டோபர்/2024 (3 தாள்கள்), 7) சான்றொப்பம் இட்ட இயக்கப்பதிவேடு (தொகுதி எண்.9) (2 தாள்கள்), 8) சான்றொப்பம் இட்ட தாமத வருகை பதிவேடு-அக்டோபர்-2024 (3 தாள்கள்), 9) சான்றொப்பம் இட்ட தன் பதிவேடு-2024 (2 தாள்கள்), 10) சான்றொப்பம் இட்ட ரொக்க பதிவேடு-23.10.2024 (2 தாள்கள்) 11) சான்றொப்பம் இட்ட நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு-2024 (தொகுதி எண்.21) (2 தாள்கள்), 12) சான்றொப்பம் இட்ட 23.10.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் ஆன் லைன் நகல் (2 தாள்கள்), 13) சான்றொப்பம் இட்ட தற்செயல் விடுப்பு பதிவேடு-2024 (2 தாள்கள்), 14) சார்பதிவாளர் திரு.கோகுலமுருகபூபதி என்பவரின் ஈட்டிய விடுப்பிற்கான ஆணையின் நகல் (1 தாள்). 15) சான்றொப்பமிட்ட பதிவு செய்யப்படாத விவசாய நிலங்கள் பரிவர்த்தனை (Exchange) பத்திரத்தில் ஏழுமலை

கவுண்டர் ஒன்றாவது பார்ட்டியாகவும் திரு.S.மணிகண்டன் இரண்டாவது பார்ட்டியாகவும் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள். முன்பதிவு வரிசை எண்.6 (D 606) ஆகும். (தாள்கள்-43), 16) சான்றொப்பமிட்ட முன் பதிவு வரிசை எண். 10 (D510), 11(D511), 12 (D512), 13 (D513) & 14 (D514) ஆகிய ஆவணங்களின் நகல்கள். (தாள்கள் -75) காஞ்சிபுரம். திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு (பொறுப்பு) மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் திரு.பாலமுருகன் அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.K.மணிவண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம். மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர் அவர்களின் செயல்முறைகள். முன்னிலை-திரு.K.மணிவண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம். மதுராந்தகம் வட்டம். செங்கல்பட்டு மாவட்டம் பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர். ந.க.எண்:- 209/2024/அ1, நாள்:- 23.10.2024. பொருள்:-திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம். செங்கற்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - அச்சரப்பாக்கம் - சார்-பதிவாளர் அலுவலகம் - 23.10.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான செயல்முறைகள். ஆணை:- செங்கற்பட்டு மாவட்டம். அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொது மக்களிடமிருந்து. லஞ்சமாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு தெரிய வரவே செங்கற்பட்டு மாவட்டம். அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில், இன்று 23.10.2024-ம் தேதி மாலை சுமார் 3.40 மணி முதல் 23.10.2024 இரவு சுமார் 23.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் குறித்து செயல்முறை ஆணை ஏற்படுத்தப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு. இன்று 23.10.2024-ந்தேதி மாலை சுமார் 3.40 மணியளவில் இரு துறை கூட்டாய்வு செய்வதற்கு அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது, மேற்குறிப்பிட்ட அலுவலகமானது தேசிய நெடுஞ்சாலையில் இருந்து இடதுபுறமாக அச்சரப்பாக்கம் செல்லும் சாலையில் அச்சரப்பாக்கம் பஜார் வீதியில் கிழக்கு பக்கம் பார்த்தவாறு அமைந்துள்ளது. அந்த அலுவலகத்திற்குள் பார்ட்டி சகிதம் மெயின் கேட்டினை கடந்து உள்ளே சென்றபோது. இரும்பு சீட் போட்ட சிறிய வெராண்டாவும். அதன் இடது புறத்தில் தனி நபர்கள் அமரும் இருக்கைகள் போடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து போர்ட்டிக்கோவும். போர்ட்டிகோவின் வலது புறத்தில் திறந்தவெளியாகவும் அமைந்துள்ளது. அலுவலகத்தின் தலை வாசல் உள்ளே நுழைந்தபோது ஒரு பெரிய ஹால் ஒன்றும் அதற்கு வலது புறம் அலுமினிய மற்றும் கண்ணாடியால் தடுக்கப்பட்ட கணிணி

அறையானது தெற்கு பார்த்தவாறும், ஹாலுக்கு இடது புறம் வடக்கு பார்த்தவாறு கிரில் கேட் ஒன்றும், அதற்கு அடுத்தாற்போல் பொது மக்கள் அமரும் அறை ஒன்றும் உள்ளது. ஹாலுக்கு அடுத்து பதிவேடுகள் அறை ஒன்றும் அமைந்துள்ளது. ஹாலின் கடைசியில் வடக்கு பார்த்தவாறு பொறுப்பு சார் பதிவாளர் திரு.ரகுநாதன், உதவியாளர் அவர்களும், அவருக்கு வலது புறம் திருமதி.சுமதி, Data Entry Operator-ம், கணினி அறையில் திரு.பாலகிருஷ்ணன், Data Entry Operator மற்றும் திரு.மதன் குமார், கேமரா ஆப்ரேட்டர் ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர். திரு.ரகுநாதன், உதவியாளர் பொறுப்பு சார் பதிவாளர் அவரை விசாரித்ததில், திரு.கோகுலமுருகபூபதி என்பவர் அச்சரப்பாக்கம் சார்பதிவாளராக பணிநியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் 07.10.2024 முதல் 25.10.2024 வரை ஈட்டிய விடுப்பில் உள்ளதாகவும், அவருக்கு பதிலாக இன்று தான் அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலக பொறுப்பு சார் பதிவாளராக இருப்பதாகவும் கூறினார். அவரிடம் நான் என்னை அறிமுகம் செய்துக் கொண்டும் மேலும் என்னுடன் உதவிக்கு வந்த செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.சரவணன், காவல் ஆய்வாளர் திரு.G.அண்ணாதுரை அவர்களையும் மற்ற காவல் ஆளினர்களான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.V.கதிர்வேல், தலைமைக்காவலர்கள் திருமதி.பூங்கொடி (பெ.த.கா.1381), திருமதி.பரமேஸ்வரி (பெ.த.கா.660), திரு.தினேஷ் வினோ (த.கா.663) மற்றும் திரு.பிரசாந்த் (கா.470) ஆகியோர்களை அறிமுகப்படுத்தி வைத்து, அனைவரது அடையாள அட்டையை காண்பித்தும், அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்தும் காண்பிக்கப்பட்டது. அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் ஆஜரில் இருந்தனர் அவர்களின் விவரம் மற்றும் கையிருப்பு பண பதிவேட்டின் விவரம் மற்றும் அவர்கள் வைத்திருந்த வைப்புத் தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள் | வைத்திருந்த பணம் | பணக் கையிருப்பு பதிவேட்டின் விவரம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.M.ரகுநாதன், வ/41<br>உதவியாளர்,<br>சார் பதிவாளர் பொறுப்பு,<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>அச்சரப்பாக்கம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.160/- | ரூ.360/- | பணக் கையிருப்பு பதிவேட்டில் ரூ.360/- குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவரிடம் விவரம் கோர மதிய உணவு செலவு போக மீதி தொகை ரூ160/- வைத்திருந்ததாக தெரிவித்தார். அதனை ஏற்று ரூ.160/- அவர் வசமே திருப்பி வழங்கப்பட்டது. |
| 2. | திருமதி.S.சுமதி, வ-31,<br>க/பெ. தினேஷ் குமார்.<br>Data Entry Operator,<br>சார்பதிவாளர் அலுவலகம், | ரூ.315/- | ரூ.650/- | பணக் கையிருப்பு பதிவேட்டில் ரூ.650/- குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவரிடம் விவரம் கோர இன்றைய செலவு போக |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம். | | | ரூ.315/- வைத்திருந்ததாக தெரிவித்தார். அதனை ஏற்று ரூ.315/- அவர் வசமே திருப்பி வழங்கப்பட்டது. |
| 3. | திரு.M.மதன் குமார், வ/31 த/பெ. மணி, கேமரா ஆப்ரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.1290/- | எந்த பதிவும் இல்லை. | இன்று அவர் அலுவலகத்திற்கு கால தாமதமாக வந்ததாகவும் அதனால் தான் வீட்டிலிருந்து கொண்டு வந்த பணம் ரூ.1290/-ஐ பணப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும், அவர் வீட்டிலிருந்து கொண்டு வந்த பணத்தை செலவு ஏதும் செய்யாமல் அப்படியே வைத்திருந்ததாக தெரிவித்ததை ஏற்று அந்த பணத்தை அவர் வசமே திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 4. | திரு.S.பாலகிருஷ்ணன் வ/40 த/பெ. சுப்ராயன் நாயுடு Data Entry Operator. சார்பதிவாளர் அலுவலகம், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.300/- | ரூ.300/- | இரு தொகையும் குறிப்பிட்டுவாறு காணப்பட்டதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |

மேலும், சார் பதிவாளர் அலுவலக அறையில் உள்ள Data Entry Operator திருமதி.சுமதி என்பவருக்கு எதிரில் உள்ள இன்வர்ட்டர் ஸ்டான்ட் அடியில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.17,100/- காணப்பட்டது. இது குறித்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அலுவலக பணியில் இருந்தவர்களிடம் விசாரிக்க உரிய விளக்கம் அளிக்காததால் அந்த பணம் ரூ.17,100/- கையூட்டாக பெறப்பட்ட பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வின்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் அவர்கள் வைத்திருந்த பண விவரம் மற்றும் பணம் வைத்திருந்ததற்காக கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம் | வைத்திருந்த இருப்புத்தொகை | பணத்திற்கான விளக்கம் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | திரு.K.பாண்டியன், வ/28 த/பெ. காளி எண்.10 கஸ்தூரிபாய் தெரு, ஈகாட்டுதாங்கள், கிண்டி, சென்னை-32 8971216139 | ரூ.1,63,000/- | தான் சென்னை கிண்டியில் உள்ள sky home அலுவலகத்தில் நிர்வாக செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், இன்று 23.10.2024-ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஐந்து பத்திர பதிவு செய்வதற்காக | சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அவரை சோதனை செய்தபோது அவர் வைத்திருந்த பச்சை நிறம் மற்றும் சிமெண்ட் நிறம் கொண்ட Shoulder bag-ல் ரூ.1,63,000/- இருந்தது கண்டெடுக்கப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் சொன்ன விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், அவர் வைத்திருந்த தொகைக்கு அவர் தெரிவித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வந்த்தாகவும், அதில் ஒரு கிளைன்ட் ஏற்கனவே முழு தொகையையும் செலுத்தி விட்டதாகவும், இருவர் ஆன்லைனில் பணம் செலுத்திவிட்டதாகவும், மற்ற இருவரில் திரு.செல்வராஜ் என்பவர் ரூ.63,000/-மும், பார்த்திபன் என்பவர் ரூ.1,00,000/-மும் தன்னிடம் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். | இந்த பணம் அச்சரப்பாக்கம் சார் பதிவாளருக்கு பத்திர பதிவு செய்ய லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்திருந்த பணமாக கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு.E.பழனி, வ/32 த/பெ. ஏழுமலை, எண்.39 பிள்ளையார் கோயில் தெரு, மதுராபுதூர் கிராமம், கயப்பாக்கம் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். 8940140555 | ரூ.1,27,500/- | தான் தன்னுடைய அப்பா திரு.ஏழுமலை என்பவரது பெயரில் செய்யூர் தாலுக்கா, மதுராபுதூரில் உள்ள 40 சென்ட் நிலத்தினை அவரது ஊரை சேர்ந்த திரு.மணிகண்டன் த/பெ.சுப்பிரமணி என்பவருக்கு விவசாய நிலங்கள் பரிவர்த்தனை பத்திரம் செய்வதற்காகவும், மேற்கண்ட மணிகண்டன் என்பவரிடமிருந்து 30 சென்ட் நிலத்தை விவசாய நிலங்கள் பரிவர்த்தனை பத்திரம் செய்வதற்காக அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு இன்று 23.10.2024-ம் தேதி வந்தபோது என்னிடமிருந்த தொகை ரூ.1,27,500/-ஐ பத்திர பதிவு செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். பத்திர பதிவு செய்ய சுமார் ரூ. 2,10,000/- வரை தோராயமாக செலவாகும் என்று சொன்னார்கள். அதற்காக தான் பணம் ரூ.1,27,500/- கொண்டு வந்திருந்ததாக தெரிவித்தார். | சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அவரை சோதனை செய்தபோது அவரது பேன்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.1,27,500/- இருந்தது கண்டெடுக்கப்பட்டது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் சொன்ன விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், அவர் வைத்திருந்த தொகைக்கு அவர் தெரிவித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் இந்த பணம் அச்சரப்பாக்கம் சார் பதிவாளருக்கு பத்திர பதிவு செய்ய லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்திருந்த பணமாக கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. |

9

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | திரு.அருளப்பன், வ/34 த/பெ.பிரான்சிஸ் புதிய தெரு, செண்டிவாக்கம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.23,500/- | தான் தன்னுடைய மைத்துனர் கிறிஸ்டோபர், சதீஷ் குமார் மற்றும் பிரபு ஆகியோர்கள் பெயரில் சென்டிவாக்கம் கிராமத்தில் ALS Annai City என்ற மனைப்பிரிவிலிருந்து ஒரு மனை வாங்கியதற்காக அவர்களது மாமா என்ற முறையில் சாட்சி கையொப்பம் இட அச்சாப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் அப்போது தான் ரூ.23,500/- வைத்திருந்ததாகவும். அந்த பணம் ஆன்லைன் பீஸ் கட்டுவதற்கும் டாகுமெண்ட் தயார் செய்த பத்திர எழுத் தர் திரு.பிரபாகர், அச்சரப்பாக்கம் என்பவருக்கு பத்திரம் தயார் செய்த fees கொடுப்பதற்கும் கொண்டு வந்ததாக தெரிவித்தார். | சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.23,500/- இருந்தது கண்டெடுக்கப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் அளித்த விளக்கம், அவர் வைத்திருந்த உரிய ஆவணங்களும் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் விசாரணைக்கு பின் மேற்கண்ட தொகை ரூ.23,500/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 4. | திரு.I.பழனி வ/48 த/பெ. ஐயனார், எண்.19 மாதா கோயில் தெரு, கீழ்நெல்லூர், சீதாபுரம் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.15,000/- | தான் இன்று 23.10.2024-ம் தேதி அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தனது உறவினரின் பத்திர பதிவிற்கு சாட்சியாக கையொப்பமிட (TP/198635383/2024) வந்தபோது என்னுடைய சொந்த செலவிற்காக அச்சரப்பாக்கம் SBI வங்கி கிளையில் ஏற்கனவே அடகு வைத்திருந்த தங்க நகை மீது மேல் அடமான கடனாக ரூ.15,000/- பெற்று வைத்திருந்ததாக தெரிவித்தார். | சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.15,000/- இருந்தது கண்டெடுக்கப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் அளித்த விளக்கம், ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால் விசாரணைக்கு பின் மேற்கண்ட தொகை ரூ.15,000/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 5, | திரு.B.அனிஷ் குமார் எண்.1, நடுத்தெரு, | ரூ.1000/- | தனது கை செலவிற்காக | இவர் ALS Annai City மனைப்பிரிவினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சென்டிவாக்கம் கிராமம் மற்றும் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம. 603319. | | வைத்திருந்ததாக தெரிவித்தார். | திருமதி. அருந்தமிழரசி என்பவரிடம் வாங்குவதற்காக அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு (டோக்கன் எண்.16) வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.1000/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 6. | திரு.B.அருந்தமிழரசி, எண்.1, நடுத்தெரு, சென்டிவாக்கம் கிராமம் மற்றும் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம. 603319. | ரூ.500/- | தனது கை செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் ALS Annai City மனைப்பிரிவினை கிறிஸ்டோபர், பாலு ஆபிரகாம், அனிஷ் குமார் ஆகியோருக்கு விற்பதற்காக அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு (டோக்கன் எண்.16) வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.500/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 7. | திரு.T.கிறிஸ்டோபர் சென்டிவாக்கம் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | ரூ.780/- | தனது பேருந்து பயன செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். | இவர் ALS Annai City மனைப்பிரிவினை திருமதி. அருந்தமிழரசி என்பவரிடம் வாங்குவதற்காக அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு (டோக்கன் எண்.16) வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.780/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 8. | திரு.R.ராஜ்குமார், NVG நகர், வந்தவாசி சாலை, மேல்மருவத்தூர், வரசக்தி அவுசிங் பைனான்ஸ் லிமிடெட். | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | தான் வரசக்தி அவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திலிருந்து வருவதாகவும், தங்களது நிறுவனத்தில் திருமதி.சசிரேகா என்பவரின் வீட்டு கடனுக்காக MOD செய்வதற்காக வந்ததாக தெரிவித்தனர். அவர் கையில் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. |
| 9. | திரு.J.ஜெஸ்வந்த் போஸ்லி எண். 7/1 MIG-2 பிருந்தாவன் டவர், கே.கே நகர், சென்னை 600078, | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | தான் இன்று பத்திர பதிவிற்காக அச்சரபாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் (டோக்கன் எண்.12) தெரிவித்தார். அவர் கையில் பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. |
| 10. | திரு.P.செல்வராஜ் எண்.14 கங்கை தெரு, அனாகபுத்தூர், | ரூ.5220/- | தான் சென்னையில் இருந்து அச்சரப்பாக்கம் சார் | இவர் பத்திர பதிவு செய்ய அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5சென்னை-70 | | பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு கார் வாடகை கொடுப்பதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். | தெரிவித்தார். (டோக்கன் எண். TP 19810 9341/2024) அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.5220/- திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 11. | திரு.S.பாலாஜி, எண்.29/16 6வது தெரு, மாஸ்க் காலனி, கிண்டி, சென்னை - 32. | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | நான் இன்று பத்திர பதிவிற்காக அச்சரபாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் (டோக்கன் எண். TP/198109098/2024) தெரிவித்தார். அவர் கையில் பணம்ஏதும் வைத்திருக்கவில்லை. |
| 12. | திரு.R.சீனிவாசன் த/பெ ராமானுஜம் MF-14 லேபர் காலனி, சிட்கோ இண்டுஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை. | - | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | இவர் கிரைய பத்திரத்திற்காக ரூ1,63,000/- 5 பாட்டிகளிடமிருந்து பெற்று இருந்தேன் என்றும் எனது நிறுவனத்தில் வேலை செய்பவராகிய திரு.பாண்டியன் அவர்களிடம் பணம் செலுத்தப்பட்டிருந்தது என்று எழுத்துப்பூர்வமாக கூறியுள்ளார். |
| 13. | திரு.S.மணிகண்டன் த/பெ சுப்பிரமணி எண்.4/500 சுண்ணாம்பு கொளத்தூர், கோயம்பாக்கம், இந்திரபுரிநகர் செங்கல்பட்டு மாவட்டம். | | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | அவரிடம் விசாரித்தபோது தன் பெயரில் உள்ள சுமார் 30 செண்ட் நிலத்தை ஏழுமலை என்பவருக்கு விவசாய நில பரிவர்த்தனைக்கு (Exchange) வந்ததாக விசாரினையில் தெரிவித்தார். |
| 14. | திரு.ஏழுமலை, த/பெ கோபால் எண்.39 பிள்ளையார் கோயில் தெரு, மதுராபுதூர் கிராமம், கயபாக்கம் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | | பணம் ஏதும் வைத்திருக்கவில்லை. | அவரிடம் விசாரித்தபோது தன் பெயரில் உள்ள சுமார் 40 செண்ட் நிலத்தை மணிகண்டன் என்பவருக்கு விவசாய நில பரிவர்த்தனைக்கு (Exchange) வந்ததாக விசாரினையில் தெரிவித்தார். |

கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.

| வ.எண். | பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம் | தனிநபர்/புரோக்கர்/அலுவலர் | கைப்பற்றபட்ட தொகையின் விவரம் |
|---|---|---|---|
| 1. | Data Entry Operator திருமதி.சுமதி என்பவரது இருக்கைக்கு எதிரே உள்ள அலுவலக இன்வர்ட்டர் ஸ்டான்ட் அடியில் இருந்து கண்டு எடுக்கப்பட்ட கணக்கில் வராத, உரிய முகாந்திரம் தெரிவிக்காத பணம். | அலுவலகத்தின் உள்ளே | ரூ.17,100/- (500x34, 100x1) |
| 2. | திரு.K.பாண்டியன், வ/28 த/பெ. காளி எண்.10 கஸ்தூரிபாய் தெரு, ஈகாட்டுதாங்கள், கிண்டி, சென்னை-32 8971216139 | தனி நபர் | ரூ.1,63,000/- (500x326) |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.E.பழனி, வ/32 த/பெ. ஏழுமலை, எண்.39 பிள்ளையார் கோயில் தெரு, மதுராபுதூர் கிராமம், கயபாக்கம் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | தனி நபர் | ரூ.1,27,500/- (500x255) |
| | | மொத்தம் | ரூ.3,07,600/- |

மேற்குறிப்பிட்ட தொகை ரூ.3,07,600/- (ரூ.500X615 நோட்டுகள் மற்றும் ரூ.100X1 நோட்டுகள்) என மொத்தம் மூன்று லட்சத்து ஏழாயிரத்து அறுநூறு ரூபாய் பணத்திற்கு பொறுப்பு சார்பதிவாளரோ, அலுவலகத்தில் பணியிலிருந்த அலுவலர்களோ மற்றும் பணம் வைத்திருந்த தனி நபர்களோ அதற்கான சரியான முகாந்திரம் கூறாததால், அனைத்தும் அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் பொறுப்பு அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. இன்று 23.10.2024-ந்தேதி காலையிலிருந்து சார்பதிவாளர் பொறுப்பு திரு.ரகுநாதன் என்பவரால் 50 டோக்கன் ஆன்லைனில் பதிவு செய்யப்பட்டதில் 24 ஆவணங்கள் இன்று பதியப்பட்டுள்ளது என தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளில், 1) வருகைப்பதிவேடு-அக்டோபர்/2024 (3 தாள்கள்), 2) இயக்கப்பதிவேடு (தொகுதி எண்.9) (2 தாள்கள்), 3)தாமத வருகை பதிவேடு-அக்டோபர்/2024 (3 தாள்கள்), 4) தன் பதிவேடு-2024 (2 தாள்கள்), 5) ரொக்க பதிவேடு-23.10.2024 (2 தாள்கள்) 6) நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு-2024 (தொகுதி எண்.21) (2 தாள்கள்)இ 7) 23.10.2024-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் ஆன் லைன் நகல் (2 தாள்கள்). 8) தற்செயல் விடுப்பு பதிவேடு-2024 (2 தாள்கள்), 9) சார்பதிவாளர் திரு.கோகுலமுருகபூபதி என்பவரின் ஈட்டிய விடுப்பிற்கான ஆணையின் நகல் ஆகியவற்றின் நகல்கள் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட நகல்களில் நானும் சான்றொப்பம் செய்து மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் கயப்பாக்கம் கிராம விவசாய நில சர்வே எண்கள்.242/1C, 242/2A, 242/2A1B1 & 243/2A1A ஆகியவற்றின் பரிவர்த்தனை (Exchange) செய்வதற்கான கட்டண தொகை விவரம் குறிக்கப்பட்டுள்ள ஆன்லைன் தாள்கள்-2. இது தொடர்பான திரு.பழனி த/பெ ஏழுமலை என்பவர் வைத்திருந்த அசல் விவசாய நிலங்கள் பரிவர்த்தனை பத்திரத்தில் ஏழுமலை கவுண்டர் ஒன்றாவது பார்ட்டியாகவும் திரு.S.மணிகண்டன் இரண்டாவது பார்ட்டியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத அப்பத்திரத்தின் நகல்கள் (தாள்கள்-41), எடுக்கப்பட்டு சார் பதிவாளர் பொறுப்பு அவர்களிடம் உண்மை நகல் என கையொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பற்றிக் கொண்டு அசல் ஆவணத்தை திரு.பழனி த/பெ ஏழுமலை அவரிடமே

திருப்பி கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.6 (D 606) ஆகும். முன்பதிவு நேரம் 15.00 முதல் 15.30 மணி ஆகும். மேலும் இப்பத்திர பதிவு தொடர்பாக எழுதி வாங்குபவரான திரு.மணிகண்டன் மற்றும் திரு.ஏழுமலை ஆகியோர்களை விசாரணை செய்ய மணிகண்டன் என்பவர் தன்னுடைய 30 சென்ட் விவசாய நிலத்தை திரு.ஏழுமலை என்பவருக்கு பரிவர்த்தனை செய்வதற்கு வந்ததாகவும். திரு.ஏழுமலை என்பவர் திரு.மணிகண்டன் என்பவருக்கு 40 சென்ட் விவசாய நிலத்தினை பரிவர்த்தனை செய்வதற்காக வந்திருந்ததாகவும் தெரிவித்தனர். அவர்களை சோதனை செய்ய எவ்வித கையிருப்பு பணமும் இல்லை. மேற்படி ஏழுமலை என்பவரின் மகன் திரு.பழனி என்பவர் வைத்திருந்த ரூ.1,27,500/- குறித்து பழனி அவர்களிடம் விசாரித்தபோது அவர் சொன்ன விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும். அவர் வைத்திருந்த தொகைக்கு அவர் தெரிவித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் இந்த பணம் அச்சரப்பாக்கம் சார் பதிவாளருக்கு பத்திர பதிவு செய்ய லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்திருந்த பணமாக கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஒரத்தி கிராம விவசாய நிலம் 1) சர்வே எண்.522/1D, 522/1E, 522/2C, 522/2D, 522/2F, 523/2A ஆக மொத்தம் கிரையம் பெற்று ஏக்கர் 2.79 சென்டில் ஏக்கர் 0.27.40 சென்டு விவசாய புஞ்சை நிலம் கிரையம் செய்யப்பட்டதாக உள்ளது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.12 (D 512) ஆகும். முன்பதிவு நேரம் 14.00 முதல் 15.00 மணி ஆகும். சொத்து மதிப்பு ரூ.1,64,400/- 2) சர்வே எண்.522/1D, 522/1E, 522/2C, 522/2D, 522/2F, 523/2A ஆக மொத்தம் கிரையம் பெற்று ஏக்கர் 2.79 சென்டில் ஏக்கர் 0.27.40 சென்டு விவசாய புஞ்சை நிலம் கிரையம் செய்யப்பட்டதாக உள்ளது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.14 (D 514) ஆகும். முன்பதிவு நேரம் 14.00 முதல் 15.00 மணி ஆகும். சொத்து மதிப்பு ரூ.1,64,400/- 3) சர்வே எண்.603/2A, 610 ஆக மொத்தம் ஏக்கர் 5.90 சென்டில் ஏக்கர் 0.26.26 சென்டு விவசாய புஞ்சை நிலம் கிரையம் செய்யப்பட்டதாக உள்ளது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.11 (D 511) ஆகும். முன்பதிவு நேரம் 14.00 முதல் 15.00 மணி ஆகும். சொத்து மதிப்பு ரூ.1,57,600/- 4) சர்வே எண்.609/2A1, 609/4, 609/2C2 ஆக மொத்தம் ஏக்கர் 0.23.14 சென்டு விவசாய புஞ்சை நிலம் கிரையம் செய்யப்பட்டதாக உள்ளது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.13 (D 513) ஆகும். முன்பதிவு நேரம் 14.00 முதல் 15.00 மணி ஆகும். சொத்து மதிப்பு ரூ.1,38,840/- 5) சர்வே எண்.609/2A ஆக மொத்தம் ஏக்கர் 0.23.61 சென்டு விவசாய புஞ்சை நிலம் கிரையம் செய்யப்பட்டதாக உள்ளது. இதற்கு முன்பதிவு வரிசை எண்.10 (D 510) ஆகும். முன்பதிவு நேரம் 14.00 முதல் 15.00 மணி ஆகும். சொத்து மதிப்பு ரூ.1,41,660/- ஆக மேற்கூறிய ஐந்து ஆவணங்களையும் பதிவிற்காக

திரு.பாண்டியன் த/பெ காளி, எண்.10 கஸ்தூரிபாய் தெரு, ஈகாட்டுதாங்கள், கிண்டி, சென்னை-32 வைத்திருந்தார். ஐந்து ஆவணங்களின் மொத்த தாள்கள் 75 ஆகும். அந்த ஆவணங்களை நகல் எடுத்து பொறுப்பு சார் பதிவாளரிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டு அசல் ஆவணத்தை திரு.பாண்டியன் த/பெ காளி அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக திரு.பாண்டியன் த/பெ காளி என்பவரிடம் விசாரணை செய்ய ரூ.1,00,000/- திரு.பார்த்திபன் என்பவர் கொடுத்ததாகவும் மீதி தொகை ரூ.63,000/- திரு.செல்வராஜ் என்பவர் கொடுத்ததாகவும் கூறினார். இது தொடர்பான முன்பதிவு வரிசை எண்.11 (D511)-ன் கிரைய பத்திரத்தை பரிசீலனை செய்த போது இன்று 23.10.2024 திரு.பார்த்திபன் த/பெ மணி, ராஜா அண்ணாமலைபுரம் சென்னை என்பவருக்கு திரு.R.சீனிவாசன் த/பெ ராமானுஜம், பி பிளாக் எண்.83E ஆற்காடு சாலை AVM ஸ்டீயோ காம்ளக்ஸ் வடபழனி என்பவர் 0.26.26 சென்ட் விவசாய புஞ்சை நிலம் இவருக்கு விற்பதாக உள்ளது. இதில் கிரைய தொகையான ரூ.1,57,600/- ஏற்கனவே பெற்றுக் கொண்டு கிரைய தொகை முழுவதும் சேர்ந்தாகி விட்டது என உள்ளது. மேலும், முன்பதிவு வரிசை எண்.14 (D514)-ன் கிரைய பத்திரத்தை பரிசீலனை செய்த போது இன்று 23.10.2024 திரு.P.செல்வராஜ் த/பெ. பொன்னுசாமி எண்.14, கங்கை தெரு, சாமுண்டீஸ்வரி நகர். அனகாபுத்தூர் என்பவருக்கு திரு.R.சீனிவாசன் த/பெ ராமானுஜம், பி பிளாக் எண்.83E ஆற்காடு சாலை, AVM ஸ்டீயோ காம்ளக்ஸ் வடபழனி என்பவர் 0.34.82 சென்ட் விவசாய புஞ்சை நிலம் இவருக்கு விற்பதாக உளளது. இதில் கிரைய தொகையான ரூ.2,43,740/- ஏற்கனவே பெற்றுக் கொண்டு கிரைய தொகை முழவதும் சேர்ந்தாகி விட்டது என உள்ளது. எனவே, பாண்டியன் என்பவர் கொடுத்த விளக்கம் சரியாக இல்லாததாலும் முன்னுக்கு பின் முரணாக உள்ளதாலும், மேற்படி தொகை பத்திர பதிவிற்கு அச்சரப்பாக்கம் பொறுப்பு சார் பதிவாளருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்த லஞ்சப் பணமாக இருக்க கூடும் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் மேலே சொன்ன ஐந்து பத்திர பதிவிற்கும் விற்பவரான திரு.சீனிவாசன் த/பெ ராமானுஜம் எழுத்துப்பூர்வமாக "கிரைய பத்திரத்திற்காக ரூ1,63,000/- 5 பாட்டிகளிடமிருந்து பெற்று இருந்தேன் என்றும் எனது நிறுவனத்தில் வேலை செய்பவராகிய திரு.பாண்டியன் அவர்களிடம் பணம் செலுத்தப்பட்டிருந்தது என்றும் கூறியுள்ளார்" ஆக மேற்படி விற்பனையாளரான திரு.சீனிவாசன் த/பெ ராமானுஜம் மற்றும் அவருடைய நிறுவனத்தை சேர்ந்த திரு.பாண்டியன் என்பவரும் கூறும் தகவல்கள் முன்னுக்கு பின் முரனாக இருந்ததால் இந்த பணம் அச்சரப்பாக்கம் பொறுப்பு சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக கொண்டுவந்த லஞ்சபணமாக கருதி விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேற்படி

15

கூட்டாய்வின் போது "லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்" என்ற அறிவிப்பு பலகை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும், இக்கூட்டாய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட தனி நபர்களை விசாரித்தும், அலுவலக ஆஜரில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் அவரவர்களது விளக்கங்களை எழுத்து மூலமாக தனித்தனியாக எழுதி கொடுத்துள்ளனர். தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 23.10.2024 தேதி மாலை 03.40 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

1. (ஒம்) திரு.M.ரகுநாதன், வ/41
உதவியாளர்,
சார் பதிவாளர் பொறுப்பு,
சார்பதிவாளர் அலுவலகம்,
அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு
மாவட்டம்

2. (ஒம்) திருமதி.S.சுமதி, வ-31,
க/பெ. தினேஷ் குமார்,
Data Entry Operator,
சார்பதிவாளர் அலுவலகம்,
அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு
மாவட்டம்.

3. (ஒம்) திரு.M.மதன் குமார், வ/31
த/பெ. மணி,
கேமரா ஆப்ரேட்டர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு
மாவட்டம்.

4. (ஒம்) திரு.S.பாலகிருஷ்ணன் வ/40
த/பெ. சுப்ராயன் நாயுடு
Data Entry Operator,
சார்பதிவாளர் அலுவலகம்,
அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு
மாவட்டம்.

5. (ஒம்) திரு.K.பாண்டியன், வ/28
த/பெ. காளி
எண்.10 கஸ்தூரிபாய் தெரு,
ஈகாட்டுதாங்கள், கிண்டி,
சென்னை-32

6. (ஒம்) திரு.E.பழனி, வ/32
த/பெ. ஏழுமலை,
எண்.39 பிள்ளையார் கோயில் தெரு,
மதுராபுதூர் கிராமம், கயபாக்கம்
அஞ்சல், செய்யூர் தாலுக்கா,
செங்கல்பட்டு மாவட்டம்.

7. (ஒம்)திரு.கதிர்வேல்,
சிறப்பு உதவி ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

8. (ஒம்) திருமதி.பூங்கொடி,
பெ.த.கா.1381
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

9. (ஒம்) திருமதி.பரமேஸ்வரி,
பெ.த.கா.660
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

10. (ஒம்) திரு.தினேஷ் வினோ,
த.கா.663
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

11. (ஒம்) திரு.பிரசாந்த், கா.470
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

12. (ஒம்) திரு.G.அண்ணாதுரை
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

13. (ஒம்) திரு.S.சரவணன்,
துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
செங்கல்பட்டு.

14. (ஒம்) திரு.K.மணிவண்ணன்,
மண்டல துணை வட்டாட்சியர், அச்சரப்பாக்கம்,
மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்
பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர்,
செங்கல்பட்டு.

அம்மா,

மேலே கண்ட புகாரினைப் பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.04/AC/2024/CP BNSS Act – 2023 Sec 106 and Prevention of Coruption Act 1988, as amended in 2018 Sec 7, 7A ஆக இன்று 24.10.2024-ம் தேதி காலை 02.45 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அசல் முதல் தகவல் அறிக்கை, புகார், செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், Form-91 ஆகியவற்றை செங்கல்பட்டு முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கையின் நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒம். (G.Annadurai), 24.10.2024 Inspector of Police, V&AC, Chengalpattu.

G.A. [signature] 24/10/2024
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chengalpattu Detachment